எனது இல: 1/543E/01/02D/7
(முரண்பாடுகள் )7.

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 18/97

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந் தோட்டக் கைத்தொழில்
அமைச்சு. சுதந்திர சதுக்கம்.
கொழும்பு–07.
1997–08–08 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்.
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## எழுதுநர் சார்ந்த சேவைகளிலுள்ள பட்டதாரிகள் பற்றிய தகவல்களைப் பெறல்

எழுதுநர் சார்ந்த சேவைகளிலுள்ளவர்களும் பதவிநிலைப்பதவிகளை வகிக்காதவர்களுமான பட்டதாரிகளிடமிருந்து தகவல்கள் கோரப்படுகின்றன.

02. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 20/94 மூலம் சம்பள சலுகையளிக்கப்பட்ட எழுதுநர் சார்ந்த சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் அடங்கலாக இற்றைவரையும் இச் சேவைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பட்டதாரிகள் பற்றிய தகவல்களை பெறுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

03. இவ்விடயத்தின் போது எழுதுநர் மற்றும் சார்ந்த சேவைகளாக பின்வரும் சேவைகள் கருதப்படுகின்றன.

1. பொது எழுதுநர் சேவை.
2. தட்டெழுத்தாளர் சேவை
3. சுருக்கெழுத்தாளர் சேவை
4. கணக்குப் பதியுநர் சேவை
5. கிறாப்பர் சேவை.
6. பண்டகசாலை காப்பாளர் சேவை.

04. உங்களின் அமைச்சில்/திணைக்களத்தில்/அலுவலகத்தில் சேவையாற்றும் மேற்குறிப்பிட்ட சேவைகளிலுள்ள எல்லா உத்தியோகத்தர்களுக்கும் இதுபற்றி அறிவிப்பதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்யவும். இத்துடன் இணைத்துள்ள மாதிரிப்படிவத்திற்கேற்ப சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் தகவல்களை 3 பிரதிகளில் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதுடன், அவை சரியானவை என உறுதிப்படுத்தி அதில் ஒரு பிரதியை உங்கள் அலுவலகத்தில் வைத்துக்கொண்டு மிகுதிப் பிரதிகள் இரண்டை 1997.10.06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் முகவரிக்கு சமர்ப்பிப்பதற்கு தாபன தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாபனப் பணிப்பாளர் நாயகம்
3 ஆம் மாடி
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந் தோட்டக், கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம். கொழும்பு-07.

05. மாகாண அரச சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களின் தகவல்கள் சம்பந்தப்பட்ட மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களினால் தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் முன்னனுப்பப்படுத்தல் வேண்டும்.

06. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல.20/94 இன் 03 ஆம் 05 ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக எதிர் கால நடவடிக்கைகளை எடுப்பதன் பொருட்டு திட்டம் செயற்படுத்துகை அமைச்சுக்கு உதவியளிப்பதற்காகவே இத் தகவல்கள் கோரப்படுகின்றன.

07. விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்காக போதிய அளவு கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதால் குறித்த திகதிக்குப் பின்னராக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பம் ஆர்.எஸ். ஜயரட்ன.
செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

**மாதிரி விண்ணப்பம்**

**எழுதுநர் மற்றும் சார்ந்த சேவைகளிலுள்ள பட்டதாரிகளின் தகவற் கொத்து.**

**மூன்று பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும்.**

1. உத்தியோகத்தரின் பெயர் :–

2. பிறந்த திகதி:–

3. சேவை நிலையம்:–

4.. முகவரி:–

(1) உத்தியோகபூர்வ:–
(2) தனிப்பட்ட:–

5. தற்போது வகிக்கும் பதவிபற்றிய தகவல்கள்:–

(அ) (1) ஈடுபட்டுள்ள சேவை
(11) முதல் நியமனத் திகதி.
(111) தற்போது ஈடுபட்டிருக்கும் வகுப்பு/தரம்

(ஆ) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 20/94 இன்படி வேதனச் சலுகை அளிக்கப்பட்டுள்ளதா?

6. பெற்றுள்ள பட்டம் தொடர்பான தகவல்கள்:–

(1) பட்டம்:
(11) பாடங்கள்:
(111) சான்றிதழ் வலுப்படும் திகதி:

மேற்படி தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் சான்றுப்படுத்துகிறேன்.

திகதி:

கையொப்பம்
பெயர்:

---

(இப்பகுதி தாபனத் தலைவரினால் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.)

எனது இல:–
திகதி:–

தாபனப் பணிப்பாளர் நாயகம்.

இந் நிறுவனத்தில் சேவையாற்றும்......................................................................
(பதவி)

திரு/திருமதி/செல்வி..........................................................ஆல் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை
(பெயர்)

இரு பிரதிகளில் சமர்ப்பிக்கின்றேன். அதில் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையாகும்.

**தாபனத் தலைவர்.**